திங்கள் | டிசம்பர் 1

📖 மாலை வாசகம் – மத்தேயு 7:24 – 29

# தேவனுக்கேற்ற கிரியைகள்

இந்த வருட ஆரம்பத்திலிருந்து ஆண்டவராகிய இயேசுவின் மலைப் பிரசங்கத்தை தியானித்து வருகின்றோம். அந்தப் பிரசங்கத்தின் கடைசி வார்த்தைகளை நாம் கடந்த சில நாட்களாக தியானித்து வருகின்றோம். யார் பரலோத்திற்கு போக முடியும் என்பதை திட்டமாகவும் தெளிவாகும் ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். அந்நாட்களிலே வாழ்ந்த மதத்தலைவர்களில் அநேகரும், அவர்களைப் பின்பற்றயவர்களும், தங்களுக்கென்று ஒரு நீதியை ஏற்படுத்தியிருந்தார்கள். தேவனாகிய கர்த்தரை தங்கள் கிரியைகளினாலே திருப்திபடுத்துவோம் என்ற எண்ணமுடையவர்களாக, வெளியரங்கமான கிரியைகளை நடப்பித்து வந்தார்கள். அவர்கள் வெளியரங்கமாக நடப்பித்து கிரியைகளில் அதிகமானவைகள் நற்கிரியைகளாவே காணப்பட்டது. அதாவது, அவர்கள் வாரத்திலே இரண்டுதரம் உபவாசித்து வந்தார்கள். இன்று யாரால் இதை ஒழுங்காக கடைப்பிடிக்க முடியும்? பலருக்கு இது மிகவும் கடினமாக செயல். அவர்கள் இப்படியான கிரியைகளை வெளியரங்கமாக செய்து வந்தபோதும், அவர்கள் இருதயமானது தேவனுக்கு தூரமானதாகவே இருந்து வந்தது. வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியாகவே அவர்கள் உள்ளம் இருக்கின்றது என்று ஆண்டவராகிய இயேசு மத்தேயு 23ம் அதிகாரத்திலே அவர்களை குறித்து கண்டித்து கூறியிருக்கின்றார். எனவே, மலைப்பிரசங்கத்தின் கருப்பொருளாவது, நாம் நமக்கு பிரியமான கிரியைகளை செய்து, தேவனாகிய கர்த்தரை பிரியப்படுத்த முயற்சி செய்யாமல், தேவன் விரும்பும், தேவ ராஜ்யத்திற்குரிய கிரியைகளை, அவருடைய சித்தப்படி நடப்பிக்க வேண்டும். வெளியரங்கமாக நற்கிரியைகள் இருதயத்தின் ஆழத்திலிருந்து புறப்பட்டு வரவேண்டும். தேவனுக்கு முன்பாக இருதயம் உண்மையாக இருக்க வேண்டும் என்பதை ஆண்டவராகிய இயேசு மிகவும் தெளிவாகவும், யாவரும் விளங்கிக் கொள்ளகூடிய விதத்திலும் கூறியிருக்கின்றார். எனவே, மீட்பராகிய இயேசுவின் முதலாம் வருகையை நினைவுகூரும் இம்மாதத்திலே, நாம் தொடர்ந்து தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி உணர்வுள்ள இருதயத்தோடு முன்னேறிச் செல்வோமாக.

**சங்கீதம் 19:14**

**என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.**

**ஜெபம்**: இந்த உலகம் கெட்டுப்போகமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்று உம்முடைய திருக்குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பிய தேவனே, நான் உணர்வுள்ள வாழ்க்கை வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# புத்தியுள்ள மனுஷன் யார்?

இந்த உலகிற்கு நற்செய்தியை அறிவிப்பதும், தர்மஞ்செய்தல் போன் றவை கிறிஸ்தவ வாழ்விலே முக்கியமான அம்சங்களாக இருக்கின்றது. அவைகளை செய்தும், இந்த உலகம் முழுவதையும் ஆதயப்படுத்திய ஒருவன், தன் ஆத்துமாவிற்கு நஷ் டம் உண்டாக்கினால், அவனுடைய நற் கிரியைகளினாலே அவனுக்கு பலன் என்ன? எனவே, நாம், புத்தி யுள்ளவர்ளாக நடக்கும்படிக்கு, ஆண்டவராகிய இயேசு கூறிய சத் திய வார்த்தைகளை வாசித்து, தியா னித்து, அவைகளின்படி நம் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு விசுவாசியான வன் சபை வளர வேண்டும், சபை பெருக வேண்டும், பரலோகத்திற்கு ஆத்துமாக்களை சேர்க்க வேண்டும் என்று அயராது பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தான். ஆனால், அவன் மனதிலே உடன் சகோதரரைக் குறித்த கசப்பு இருந்தது. அவன் அதைக் குறித்து எண்ணமற்றவனாக தான் விரும்பும் நற்கிரியைகளை நடப்பித்து வந்தான். ஆனால், மனு ஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பி தங்களையும் மன்னியாதிருப்பார் ஆண்டவராகிய இயேசு கூறியிரு க்கின்றார். மன்னிப்பின் மாட்சிமையே நற்செய்தியின் முக்கிய அம்ச ங்களில் ஒன்றாக இருக்கின்றது. அந்த மன்னிப்பை தன் வாழ்விலே கடைப்பிடிக்க மனதில்லாமல், நற்செய்தியை அறிவிப்பதினால் அவனு க்கு வரும் பலன் அற்பமே. பிரியமானவர்களே, நாம் சம்பூரண பரிசுத் தராக எப்போதும் இருக்க வேண்டும் என்பது பொருளல்ல. இந்த உலக த்திலே நாம் வாழும் வரை, இந்த சரீரயத்திலே காயங்கள் ஏற்படலாம். ஆனால், அந்த காயத்தை ஒருவன் பாரமுகமாகவிட்டு, அது சீழ் பிதுக் கப்படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்குமென்றால், அது பாதாமான பின் விளைவுகளை ஏற்டுத்துமல் லவா? அதுபோலவே, நாம் வாழும்வரை மனதிலே கசப்புக்கள் உண்டா கலாம். ஆனால் அவைகளை அப்படியே பாரமுகமாகவிட்டுவிட முடி யாது. அவைகளை மனித பெலத்தினாலே மேற்கொள்ள முடியாது. அவைகளை மேற்கொள்ளும்படிக்கு தேவ ஆவியானவர் நம்மோடு இருக்கின்றார். அனுதினமும் புதுக் கிருபையை அவர் பொழிகின்றார். நாம் நடக்க வேண்டிய வழியை போதிக்கின்றார். எனவே, ஆண்டவரா கிய இயேசு கூறிய வார்த்தை கேட்டு அதன்படி நடவுங்கள்.

**மத்தேயு 7:24**

**அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, உம்முடைய வார்த்தைகளைக் கேட்டு, அவை களின்படி செய்கிற, உமக்கு பிரியமான பிள்ளையாக நான் வாழ எனக்கு உம் வார்த்தையைக் குறித்த உணர்வுள்ள இருதயத்தை தந்தருள் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மேன்மையான அழைப்பு!

ஒரு சபையிலே இருந்த வாலிபனொருவன், ஒலிபெருக்கி மற்றும் கம்யூட்டர் சாதனங்களை இயக்குவதில் மிகவும் ஆர்வமுள்ளவனாக இரு ந்தான். அது தன்னுடைய அழைப்பு என்று கூறிக் கொண்டு, அவன் அந்தப் பொறுப்பை எடுத்து, அந்தக் காரியத்திலே மிகவும் கருத்துள் ளவனாக, சிறந்த முறையிலே அவை களை பேணி பராமரித்து, இயக்கி வந்தான். ஆனால், அவன் ஆராத னை வேளையிலே, துதிப்பதில்லை, பிரசங்க நேரத்திலே போதிக்கப்படும் வார்த்தைகளுக்கு செவி கொடுப்பதி ல்லை. அவனுடைய இள வயத்திற்கு எட்டிய அறிவின்படி, அவையெல் லாம் தன் அழைப்பு அல்ல என்று கருத்திக் கொண்டான். நித்திய ஜீவ னுக்கென்று அழைப்பை பெற்ற அருமையான சகோதர சகோதரிகளே, நாம் யாவரும் நித்திய வாழ்விற்கென்று அழைக்கப்பட்டிருக்கின்றோம். சபை கட்டிடங்கள், தளபாடங்கள், கம்யூட்டர் சாதனங்கள் இப்படியாக பற்பல பொருட்கள் இருப்பது நல்லது. ஆனால், அவைகளினாலே ஒருவருக்கும் நித்திய ஜீவன் உண்டாவதல்ல. இன்றைய நாட்களிலும், ஓலைக் கொட்டில்களிலும், மரங்களுக்கு கீழும் இருந்து தேவனை ஆராதித்து வருகின்றார்கள். அந்த வாலிபனைப் போன்ற மனநிலை யுள்ள அநேகரை இந்த நாட்களிலே ஆங்காங்கே காணக்கூடியதாக இருக்கின்றது. நான் சபைக்கு வருவது மேளம் தட்டுவதற்கு, அதற்கு எனக்கு இடமில்லை என்றால், அந்த சபை எனக்கு தேவையில்லை என்று மனநிலைக்கு ஒத்த மனிதர்கள் இருக்கின்றார்கள். பிரதானமாக, நாம் சபைக்கு செல்லும் காரணம் என்ன? நீங்கள் செல்லும் சபையிலே, இசைந்த ஆத்துமாக்களாக நாம் தேவனை முழுமனதோடு ஆராதிக்க வேண்டும். உங்கள் சபையிலே போதிக்கப்படும் தேவ வார்த்தைகளை விழித்திருந்து கேட்டு, அதை தியானித்து, உங்கள் வாழ்வை ஆராய்ந்து பார்த்து, தேவனிடம் இன்னும் கிட்டி சேர வேண்டும். இவைகள் இன்றியமையாதவைகள். வேதத்தை கருத்தோடு வாசித்து அல்லது கேட்டு, தியானித்து, தன் வாழ்விலே நடைமுறைப்படுத்துவது தனக்கு ரியதல்ல என்று எந்த விசுவாசியும் கூறிக் கொள்ள முடியாது. நமக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகளை செய்வது நல்லது, அதனால், நான் என் பொறுப்பை செய்கின்றேன் போதனைகள் எனக்கல்ல, மற்றவர்களுக்கு என்று எவரும் சொல்ல முடியாது. ஜீவ வார்த்தையில்லாத வாழ்வு வாழ்வல்ல.

**யோவான் 6:63**

**நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.**

**ஜெபம்**: அன்பின் பரலோக பிதாவனே, உம்முடைய அநாதி தீர்மானித்தின்படி நான் பெற்றுக்கொண்ட மேன்மையான அழைப்பை குறித்து எண்ணமற்ற வாழ்க்கை வாழாதபடிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஜீவன் தரும் திருவார்த்தை

"என் பிரியமான சகோதரரே, மோசம்போகாதிருங்கள். நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. அவர் சித்தங் கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார். ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள். மனுஷருடையகோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே. ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான். அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம் விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான்." என்று யாக்கோபு எழுதின நிருபத்திலே முதலாம் அதிகாரத்திலே 16ம் வசனத்திலிருந்து 24 வசனம் வரை வாசிக்கிறோம். எனவே, நாம் நித்திய ஜீவன் தரும், சத்திய வசனமாகிய திருவசனத்தை கேட்க வேண்டும். அதை கேட்டு, அதை பிரசங்கிக்ககூடிய திறமையுள்ள விசுவாசிகள் அநேகர் இருக்கின்றார். அத்தோடு நின்று விடாமல், திருவசனத்தை போதிக்கின்றவர்களும்,கேட்கின்றவர்களும்,அவைகளை தங்கள் சொந்த வாழ்க்கையில் கைக்கொள்வதில் அனுதினமும் வளர்ந்து பெருக வேண்டும். தேவ வசனத்தை அட்டை செய்கின்றவன் தன் ஆத்து இரட்சிப்பை அற்பமாக்குகின்றவனாக காணப்படுவான். அவன் பற்பல கிரியைகளை செய்தாலும், ஜீவ வசனம் கிரியை செய்வதற்கு அவனிடத்தில் இடமில்லாமல் இருப்பதினால் அவன் தன்னிலே வீண் அலுவற்காரனாகவே காணப்படுவான். நீங்களோ, முதலாவதாக திருவசத்தை சாந்தத்தோடு ஏற்று அதன்படி வாழுங்கள்.

**யாக்கோபு 1:21**

**உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.**

**ஜெபம்**: உம் வார்த்தையினால் என்னை உருவாக்கி தேவனே, நான் திருவசனத்தைக் கேட்கிறவனாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவனாயும் இருக்க எனக்கு பெலன் தந்து உம் வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பிதாவின் சித்தத்தை செய்கின்றவர்கள்

**யோவான் 6:29**

**அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்.**

"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார் அவருடைய மகிமையைக் கண்டோம் அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது." அந்த வார்த்தையானவர் இயேசு, இந்த உலகத்திற்கு வந்த நாளை நாம் இம்மாதத்திலே நினைவுகூருகின்றோம். பிதாவாகிய தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறியதை அந்நாளிலே கொண்டாடுகின்றோம். ஜீவ வார்த்தையை கேட்க மனதில்லாதவர்கள் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை செய்ய முடியாது. ஒரு சமயம், மதத்ததலைர்கள், ஆண்டவராகிய இயேசுவை சோதிக்கும்படி, அவரிடத்தில் வந்து சில கேள்விகளை கேட்டார்கள். அவர்களுக்கோ தேவனுடைய வார்த்தையை கேட்க மனதில்லை. அவர்கள் உணர்வடையும்படி அவர்களை நோக்கி: உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒருமனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் மூத்தவனிடத்தில் அவன் வந்து: மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலைசெய் என்றான். அதற்கு அவன்: மாட்டேன் என்றான் ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான். இளையவனிடத்திலும் அவன் வந்து, அப்படியே சொன்னான் அதற்கு அவன்: போகிறேன் ஐயா, என்று சொல்லியும், போகவில்லை. இவ்விருவரில் எவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் என்று கேட்டார் அதற்கு அவர்கள்: மூத்தவன்தான் என்றார்கள். அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அதென்னவெனில், ஆலயத்திலே பொறுப்பாக இருந்தவர்கள், தேவ வார்த்தையை கேட்டு மனதிரும்ப மனதில்லாதவர்களாக இருந்தார்கள். ஆனால், பாவிகளாக வாழ்ந்தவர்களோ, தங்களை தாழ்த்தி, மனந்திரும்பி, தேவனுடைய வார்த்தைக்கு தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். அவர்கள் வார்த்தையிலே நிலைத்திருந்தால், தேவனுக்கேற்ற கிரியைகளை செய்தார்கள்.

**ஜெபம்**: மெய்யான ஜீவன் தரும் வார்த்தையை எனக்கு தந்த தேவனே, உம்முடைய வார்த்தையைக் கேட்டு, அந்த வார்த்தையிலே நிலைத்திருந்து வாழும்படிக்கு எனக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# திருவசனத்தை கைகொள்ளுங்கள்

பென்யமீன் கோத்திரத்தாரில் கீஸ் என்னும் பேருள்ள மகா பராக்கிர மசாலியான ஒரு மனுஷன் இருந்தான். அவனுக்குச் சவுல் என்னும் பேருள்ள சவுந்தரியமான வாலிபனாகிய ஒரு குமாரன் இருந்தான். அந்த வாலிபனை தேவனாகிய கர்த்தர்தாமே தெரிந்தெடுத்து, சமஸ்தல இஸ்ர வேலுக்கும் முதலாவது ராஜாவாக ஏற்படுத்தினான். ராஜாவாகிய சவுல் வழியாக கர்த்தர் இஸ்ரவேலுக்கு இரட்சிப்பை அருளினார். அவனுடைய ராஜ்யபாரம் ஸ்திரப்பட்டது. சவுல் ராஜ்யபாரம் பண்ணி, ஒரு வருஷமாயிற்று. அவன் இஸ்ரவேலை இரண்டாம் வருஷம் அரசாண்ட போது, அவனுடைய ஆளுகை முறைமையிலே மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தது. முன்பு கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அதன்படி செய்து வந்த சவுல் ராஜா, பின்பு கர்த்தருடைய வார்த்தையை கேட்டு, அது கர்த்தருடைய வார்த்தை என்று அறிந்திருந்தும், அந்த வார்த்தையை அசட்டை பண்ண ஆரம்பித்தான். கர்த்தர் கூறிய காரியங்களைக்கு கவனம் செலுத்தாமல், தன் மனவிருப்பப்படி காரியங்களை செய்தான். அப்படியாக தன் விருப்பத்தை செய்து வந்தது மாத்திரமல்ல, அவனுடைய தவறுகளை கர்த்தருடைய தீர்க்கதரியானவர் சுட்டிக் காட்டும் போது, தன் தவறுகளை ஏற்றுக் கொள்வதற்கு பதிலாக, அவைகளை நியாயப்படுத்த வழிகளை தேடினான். கர்த்தருடைய தீர்க்கதரியாகிய சாமுவேல் சவுலைப் பார்த்து: புத்தியீனமாய்ச் செய்தீர் உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக் கொள்ளாமற்போனீர் மற்றப்படி கர்த்தர் இஸ்ரவேலின்மேல் உம்முடைய ராஜ்யபாரத்தை என்றைக்கும் ஸ்திரப்படுத்துவார். இப்போதோ உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள்மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார் கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையை நீர் கைக்கொள்ளவில்லையே என்று சொன்னார். பிரியமான சகோதர சகோதரிகளே, வாரந்தோறும் கர்த்தருடைய வார்த்தையை கேட்டுவிட்டு, அபிஷேகம் பண்ணப்பட்ட சவுல் ராஜா தேவ வார்த்தையை அசட்டை செய்தது போல நீங்களும் அசட்டை செய்து உங்களுக்கு பிரியமானதை செய்யாமல், தேவனுக்கு பிரியமானவைகளை உங்கள் வாழ்க் கையிலே நடப்பியுங்கள்.

**யாக்கோபு 1:22**

**அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.**

**ஜெபம்:** உண்மையுள்ள தேவனே, நான் ஒருபோதும் உம்முடைய வார்த்தையை அசட்டை பண்ணி, என் மனவிருப்பத்தின்படி கிரியைகளை நடப்பிக்காமல், உம்முடைங வார்த்தையின் வழியிலே வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உள்ளத்திலிலுந்து புறப்படுபவைகள்

ஒரு சமயம் “பரிசேயரும் வேதபாரகரும் ஆண்வர் இயேசுவை நோக்கி: உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை மீறி, ஏன் கை கழுவாமல் சாப்பிடுகிறார்கள் என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள் அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகி யிருக்கிறது என்றும், மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆரா தனை செய்கிறார்கள் என்றும், எழு தியிருக்கிறபிரகாரம், மாயக்காரரா கிய உங்களைக்குறித்து, ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் சொல்லி யிருக்கிறான். நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷ ருடைய பாரம்பரியத்தைக் கைக்கொ ண்டுவருகிறவர்களாய், கிண்ணங்க ளையும் செம்புகளையும் கழுவுகிறீர்கள் மற்றும் இப்படிப்பட்ட அநேக சடங்குகளையும் அனுசரித்து வருகிறீர்கள் என்றார். பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள் ளும்படிக்கு தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினது நன்றாயி ருக்கிறது. எப்படியெனில், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்றும், தகப்பனையாவது தாயையாவது நிந்தி க்கிற வன் கொல்லப்படவேண்டும் என்றும், மோசே சொல்லியிருக்கி றாரே. நீங்களோ, ஒருவன் தன் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் கொர்பான் என்னும் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டால் அவ னுடைய கடமை தீர்ந்தது என்று சொல்லி, அவனை இனி தன் தகப்ப னுக்காவது தன் தாய்க்காவது யாதொரு உதவியும் செய்ய ஒட்டாமல் நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினால் தேவ வசனத்தை அவமா க்குகிறீர்கள். இதுபோலவே நீங்கள் மற்றும் அநேக காரியங்களையும் செய்கிறீர்கள் என்று சொன்னார்.” அன்று மட்டுமல்ல இன்றும் விசுவா சிகள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் சிலர், வெளியரங்கமான கிரியைகளிலே சுத்தமாக இருக்க விரும்புகின்றார்கள். ஆனால், ஆன்மீக இரட்சிப்புக்குரியதும், மறுரூபமாகுதலுக்குரியதுமான நற்கிரியைகளை தங்கள் வாழ்க்கையில் மறந்து மற்றவர்களுடைய வாழ்விலே குறை களை கண்டுபிடிக்க முந்திக் கொள்கின்றார்கள். நீங்களோ அப்படியிரா மல் உணர்வுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள்.

**மாற்கு 7:14**

**பின்பு இயேசு ஜனங்களை ல்லாரையும் வரவழைத்து அவர்களை நோக்கி: நீங்கள் எல்லாரும் எனக்குச் செவி கொடுத்து உணருங்கள்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, உம் வார்த்தையை கேட்டு நான் உணர்வடை ந்து, உள்ளத்திலிருந்து புறப்படுகிறவைகளை குறித்து எச்சரிக்கையுள்ள வனாக இருக்கும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

திங்கள் | டிசம்பர் 8 | 📖 மாலை வாசகம் – அப்போஸ்தலர் 13:22

# தேவனுக்கு ஏற்ற இருதயம்

தேவனுடைய வார்த்தையை கேட்டும், அதை கைகொள்ள மனதில்லா மல் இருந்த சவுல் ராஜா, தன் இஷ்டப்படி நடந்து கொண்டதைக் குறி த்து கடந்த நாட்களிலே தியானம் செய்தோம். அதனால், தேவனாகிய கர்த்தர்தாமே, தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனாகிய தாவீதை தெரிந்தெடுத்தார். "தம்முடைய இருதயத்திற்கு ஏற்றவன்" என்பதன் கருத்து என்ன? அவன் முற்றிலும் பரிசுத்தமான மனுஷனா? ஒருபோதும் தேவனுடைய வார்த்தையை கேட்க தவறாமல் இருந்து பாவம் செய் யாத மனுஷனா? இல்லை. தாவீது ராஜா தன் வாழ்க்கையிலே தவறிப் போன இடங்கள் உண்டு. ஆனால், தேவனுடைய தீர்க்கதரிசி வழியாக, தேவ வார்த்தையை கேட்கும் போது, மனதிலே குத்துண்டு, மனம் திரும்பி, மனம் வருந்தி, தேவனை அண்டை சேருக்கின்ற மனிதனாக வாழ்ந்து வந்தார். தேவனோடு வாழ்வதன் பாக்கியத்தை நன்றாக அறிந் திருந்தான். ஒரு சமயம், பாவத்திலே அகப்பட்டுக் கொண்ட போது, தன் னுடைய நிலைமைக் குறித்து சங்கீதம் 51ம் அதிகாரத்திலே கூறியிரு க்கின்றார். அந்த சங்கீதத்திலே குறிப்பிட்டப்பட்ட சில வார்த்தைகளா வன: "என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும். தேவனே, சுத்த இருத யத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத் திலே புதுப்பியும். உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும். அப்பொ ழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன் பாவிகள் உம்மிட த்தில் மனந்திரும்புவார்கள்." பிரியமான சகோதர சகோதரிகளே, தேவ னுடைய வார்த்தையை கேட்டு அதன்படி நடப்பது என்பது, பாவமற்ற முற்றிலும் பரிசுத்தமான வாழ்வு என்பது பொருளல்ல. மாறாக, பரிசுத்த மாகுதலை நாம் தேவ பயத்தோடு காத்துக் கொள்ள வேண்டும். சவுல் ராஜாவைப் போல குற்றங்கள் மறைத்து, குறைகளை நியாயப்படுத்த முயற்சி செய்யாமல், குற்றங்கள் குறைகளை குறித்து பிரசங்கிக் கப்படும்போது, தாவீது ராஜாவைப் போல, நம்மைத் தாழ்த்தி அதை ஏற்றுக் கொண்டு, மனம் வருந்தி, மனந்திரும்பும் மனதுடையவர்களாக வாழ வேண்டும்.

**1 சாமுவேல் 13:14**

**கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள்மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்;**

**ஜெபம்:** இருதயங்களை ஆராய்ந்து அறிகின்ற பரலோக தேவனே, என் இருதயம் உமக்கு முன்பாக உண்மையுள்ளதாகவும், உமக்கு ஏற்றதாகவும் இருக்கும்படி என்னை உணர்வுள்ளவனாக மாற்றுவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# என் இருதயம் எப்படிப்பட்டது?

நித்திய ஜீவன் தரும் தேவனுடைய திருவார்த்தைகள் ஏன் சில விசுவாசிகளுடைய வாழ்விலே பலனற்றதாக போய்விடுகின்றது? தேவனுடைய வார்த்தை குறைவுள்ளதோ? இல்லை! கர்த்தருடைய மாறாத வார்த்தை சம்பூரணமானது. அந்த வார்த்தையானது, நற்பலன் தரும் நல்ல விதைக்கு ஒப்பிடப்படுகின்றது. நற்பலன் தரும் ஒரு மரத்தின் விதையானது ஏதோ ஒரு நிலத்திலே விழுந்தால் அது நற்பலன் கொடுக்குமா? இந்த உலகத்திலே முள்ளும் குருக்கும் களைகளை எந்த ஒரு நிலத்திலும் முளைத்து படர்ந்து, பரவி செல்கின்றது. ஆனால், நல்ல பலன் தரும் மரங்களின் விதைகள், விழுந்து முளைப்பதற்கு, நிலமானது பண்படுத்தப்பட வேண்டும். பண்படுத்தப்பட்ட நிலம் பாதுகாக்கப்பட வேண்டும். பாதுகாக்கப்படும் அந்த பண்படுத்தப்பட்ட நிலம் பராமரிக்கப்பட வேண்டும். அந்த நிலமானது விசுவாசிகளின் இருதயத்திற்கு ஒப்பிடப்படுகின்றது. தேவனுடைய வார்த்தையை கேட்கும் சிலர், தங்கள் இருதயத்தை வழியோரம் போல வைத்திருக்கின்றார்கள். போக்கும் வரத்துமான வழியோரத்திலே விதைகள் எப்படி விழுந்து எப்படி முளைக்கும்? "ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான் அவனே வழியருகே விதைக்கப்பட்டவன். கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளுகிறவன் ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருப்பான் வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான். முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப்போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்." அருமையான சகோதர சகோதரிகளே, உங்கள் இருதயம் இன்று எப்படி இருக்கின்றது? உணர்வற்ற வழியோரமா, கடினமான கற்பாறை நிலமா? உலக ஆசைகள் நிறைந்த முற்புதரா? அல்லது பண்படுத்தி, பாதுகாக்கப்பட்டு, பராமரிக்கப்படும் நல்ல நிலமா? தேவ வார்த்தையை கேட்டு, அதன்படி உங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ளுங்கள். எல்லாக் காவலோடும் உங்கள் இருதயத்தை காத்துக் கொள்ளுங்கள்.

**மத்தேயு 13:23**

**நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.**

**ஜெபம்:** என்னை நித்திய ஜீவனுக்கென்று அழைத்த தேவனே, உம்முடைய வசனத்தின்படி என் இருதயத்தை நான் எல்லாக் காவலோடும் காத்துக்கொள்ளும்படி என்னை உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சத்தியத்தில் நிலைத்திருப்பது

ஆஸ்தியில் தனக்கு வரும் பங்கை தனக்குத் தரவேண்டும் என்று தன் தகப்பனானவனிடம் கேட்டு, அதைப் பெற்ற பின்பு, எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூரதேசத்துக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன் மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, வேசிகளிடத்திலே தன் ஆஸ்தியை அழித் துப்போட்டான். அவன் உணர்வடைந்து, புத்தி தெளிந்தபோது, தன் தகப்பனானவனின் வீட்டை நினைத்துக் கொண்டான். மனம் திரும்பி, மனம் வருந்தி தன் தகப்பனான வனை நோக்கி: பரத்துக்கு விரோ தமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம் முடைய குமாரன் என்று சொல்லப் படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான். அருமையான மனந்திருப்புதல். அவன் தன் தக ப்பன் வீட்டிற்கு திரும்பி விட்டான் என்பதன் கருப்பொருள் என்ன? அவன் தன் தான் வாழ்ந்து துன்மார்க் கமான பழைய பழைய வாழ்க்கையை விட்டுவிட்டு, தப்பனானவர் கூறு வதைகேட்டு, குமாரனாக அல்ல, அவருடைய வேலைக்காரரில் ஒரு வனாக வாழ்வதற்கு அவன் தன்னை அர்பணித்தான் என்பதே அதன் பொருளாக இருக்கின்றது. ஆனால், அவன் மறுபடியும், தன் பழைய மோக பாவங்களுங்கு உடந்தையாக இருந்தவர்களோடு போக்கும் வரத்ததுமாக இருந்தால், அவனுடைய தகப்பனானவர் அதை ஏற்றுக் கொள்வாரா? அவன் ஒருமுறை மனந்திரும்பிவிட்டான், அதுபோதும் என்று விட்டுவிடுவாரா? சற்று சிந்தித்துப் பாருங்கள். அருமையான சகோதர சகோதரிகளே, தேவனுடைய வார்த்தையை கேட்டு அதன்படி வாழ்வதென்பது, ஒருநாள் நடந்த சம்பவமல்ல. நாம் உயிரோடிருக்கு ம்வரை அவருடைய வார்த்தையிலே நிலைத்திருக்க வேண்டும். ஒரு வேளை தேவனுடைய வார்த்தையை கேட்டும், அதன்படி வாழத் தவறி விட்டேன் என்று உணர்த்தப்படும் போது, மனம்திரும்ப வேண்டும். அது மாத்திரமல்ல, அதே பாவத்தை மறுபடியும் செய்யாதபடிக்கு, அந்தப் பாவத்தை உந்தும் காரணிகளை அல்லது சந்தர்பங்களை, தகாத உற வுகளை அல்லது நட்புக்களை நம் வாழ்விலிருந்து முற்றாக அகற்றிவிட வேண்டும். அப்படியாக எல்லாக் காவலோடும் நம் இருதயத்தை நாம் தேவ வார்த்தையினால் ஆராய்ந்து பார்ந்து, காத்துக் கொள்ள வேண் டும். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்ப தற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்."

**1 யோவான் 1:10**

நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது.

**ஜெபம்:** தயை பெருத்த தேவனே, நான் என்னை வஞ்சிக்காமல், சத்திய த்திலே நிலைத்திருக்கும்படி, என் பாவங்களை அறிக்கையிட்டு, மனந்தி ரும்பி வாழும் உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# யார் ஆசீர்வதிகக்கப்பட்டவன்?

ஒரு கிராமத்திலே வாழ்ந்து வந்த வாலிபர்கள் சிறு வயதிலிருந்து ஒரே பாடசாலையிலே கல்வி கற்று வந்தார்கள். ஒரே ஆலயத்திற்கு சென்று ஞாயிறு ஓய்வுநாள் பாடசாலையில் கற்று வந்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு, பட்டணத்திற்கு உயர்தர கல்வியை கற்பதற்காக வாய்பு கிடைத்தது. அது தேவன் தனக்கு கொடுத்த ஆசீர்வாதம் என்று ஆலயத்திலே சாட்சி பகர்ந்தான். பட்டணத்திற்கு சென்று, தேசத்திலே பிரபல்யமான பாடசாலையொன்றி உயர்கல்லவியை முடித்து, பல்கலைகழத்திற்கு சென்று பட்டம் பெற்று, நல்ல வேலையொன்றிலே அமர்ந்தான். வேலையிலே அவனுக்கு முன்னேற்றங்கள் கிடைத்தது. பட்டணத்திலே வீடொன்றை கொள்வனவு செய்து, வாகனம் ஒன்றை வாங்கி, பல வசதிகளுடன் வாழ்ந்து வந்தான். ஆனால், அவன் பட்டணத்திற்கு சென்ற நாளிலிருந்து ஆலயத்திற்கு செல்லவதை படிப்படியாக குறைத்துவிட்டான். வருடத்திற்கு ஒருமுறை ஆலயம் செல்லும் கிறிஸ்மஸ் விசுவாசியாக மாறிவிட்டான். பரிசுத்த வேதாகமத்தை வாசித்து தியானிக்க அவனுக்கு நேரம் இல்லை. ஜெப வாழ்க்கை அவனுக்கு துரமாக இருந்தது. ஆனால், கிராமத்தில் வாழ்ந்து வந்த மற்றய நண்பனோ, தவறாமல் ஆலயத்திற்கு சென்று, தேவனை ஆராதித்து வந்தான். வேதப் படிப்புக்களுக்கு சென்று, வேதத்தின் ஆழங்களை அறிந்து, தேவனை அறியும் அறிவிலே வளர்ந்து வந்தான். தன் தகமைகளுக்கு தக்க ஒரு வேலையை செய்து, செல்லும் இடமெங்கும் தேவனுக்கு சாட்சியாக இருந்து வந்தான். தேவனோடுள்ள உறவிலே அனுதினமும் வளரந்து வந்தான். பிரியமான சகோதர சகோதரிகளே, இவர்களின் எவன் ஆண்டவராகிய இயேசு சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவனாக இருக்கின்றான்? எவன் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனாக இருக்கின்றான்? சற்று சிந்தித்துப் பாருங்கள். இவர்களில் எவனைப் போல உங்கள் பிள்ளைகள் இருக்க வேண்டும் என்று உண்மைாக உங்கள் மனதிலே நினைத்துக் கொள்கின்றீர்கள்? இன்று பலர் உலக ஆசீர்வாதங்களை தேவ ஆசீர்வாதம் என்று எண்ணிக் கொண்டு, தேவனுடைய ராஜ்யத்தையும் அதன் நீதியையும் தங்கள் வாழ்விலே முதன்மை படுத்துவதில்லை. தேவனுடைய வார்த்தைகள் உங்களிலே நிலைத்திருப்பதாக. அப்பொழுது நீங்கள் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வீர்கள்.

**யோவான் 15:6**

ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்;

**ஜெபம்:** நித்திய ஜீவனை அருளும் தேவனே, நான் உம்மிலும், தேவ வார்த்தைகள் என்னிலும் நிலைத்திருக்கவும், அந்த வார்த்தையைப் பற்றிக் கொண்டு, அதன்படி அனுதினமும் மறுரூபமாகும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் – 2 தீமோ 3:14 –17

# எதைக்குறித்து பெருமைபாராட்டுகின்றீர்கள்?

“மனிதர்கள் வெட்கப்பட வேண்டிய காரியங்களை தங்கள் சுதந்திரம் என்று கூறி அதைக் குறித்து பெருமை பாராட்டுகின்றார்கள். பெருமை பாராட்ட வேண்டிய வாழ்வின் அடித்தளமான காரியங்களைக் குறித்து வெட்கமடைகின்றார்கள்.” எடுத்துக்காட்டாக, இன்றைய நாட்களிலே, மது பானம் குடித்து வெறிகொள்ளாத மனிதர்களை சபை சந்திக்கு ஏற்புடையவர்கள் அல்ல என்றும், இப்படிப் பட்டவர்கள் நாகரீகமறியாதவர்கள், திருமணம் செய்வதற்கு ஏற்புடையவர்கள் அல்ல என்றும் அவர்களின் நட்பைக் குறித்து வெட்கமடைந்து அவர்களை தவிர்த்துக் கொள்கின்றார்கள். ஆனால், குடித்து வெறித்து களியாட்டங்களிலே ஈடுபட்டு, தூஷணமான வார்த்தைகளை பேசிகொள்கின்றவர்கள் ஊரோடு ஒத்தோடுகின்றவர்கள் என்று அவர்களைக் குறித்து பெருமை பாராட்டிக் கொள்கின்றார்கள். இப்படியாக தேவனாகிய கர்த்தர் செய்யாதே என்று கூறிய காரியங்கள் சட்டமாக்கப்படும் போது மனிதர்கள் அதைக் குறித்து பெருமை பாராட்டுகின்றார்கள். தேவனாகிய கர்த்தரின் போதனைகளை கேட்டு நடக்கி ன்றவர்களை குறித்து பரியாசம் செய்து கொள்கின்றார்கள். மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியரா யும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களா யும், தாய்தக ப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங் காதவர்களாயும், அவதூறுசெய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர் களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு” என்று பரிசுத்த வேதாகமம் கூறியிருக்கின்றது. தேவ வார்த்தைகளை அசட்டை செய்கின்ற மனிதன், வாழ்வின் உறுதியாக அஸ்திபாரத்தை புறக்கணித்து, தன் பார்வைக்கு செம்மையாகதோன்றும் வழிகளை தெரிந்து கொள்கின்றான். ஆனால், அதன் முடிவிலே நித்திய மரணத்தை சுதந்தரித்துக் கொள்கின்றான். நீங்களோ நித்திய ஜீவன் தரும் திரு வார்த்தையை பற்றிக் கொள்ளுங்கள்.

**தானியேல் 12:2**

**பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்.**

**ஜெபம்:** நித்திய ஜீவன் தரும் திருவார்த்தையை எனக்கு தந்த தேவனே, பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற உம்மைக் குறித்து மேன்மைபாராட்ட உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ கிருபை என்றுமுள்ளது

**புலம்பல் 3:22**

**நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை.**

“தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது.” அந்த அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களும் எல்லா சூழ்நிலையிலும் அசையாமல் உறுதியாய் நிலைத்திருக்கின்றார்கள். உறுதியாய் இருப்பவர்கள் வார்த்தையிலே நிலைத்திருக்கின்றார்கள். வார்த்தையின் நிமித்தம், தங்கள் வாழ்விலே இந்த உலகத்தினால் உண்டாகும் உபத்திரவங்களினால் இவர்கள் தளர்ந்துபோவதில்லை. ஒரே ஆவியிலே உறுதியாய் நின்று, ஒரே ஆத்துமாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காகக் கூடப்போராடி, எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்கள். எவ்விதத்திலும் இவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக நடந்துகொள்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்கள் வாழ்வில் தொடர்சியாக வார்த்தையிலே நிலைத்திருப்பதால், தங்கள் விருப்பப்படி வாழ்க்கையை வாழாமல், கஷ்டங்கள், நஷ்டங்கள் வந்தாலும் தேவனுக்கு பிரியமானவைகளை நடப்பிக்கின்றார்கள். இவர்கள் நன்மை செய்து பாடநுபவிக்க ஆயத்தமாயிருப்பவர்கள். தங்கள் கல்வி, வேலை, வியாபாரம், உறவு, நட்பு, திருமணம் போன்ற எல்லா விவகாரங்களிலும் தேவனை மையமாக வைத்து, தேவனுடைய ராஜ்யத்தை தங்கள் வாழ்விலே முதன்மைப் படுத்துகின்றார்கள். ஆனால், சில விசுவாசிகள் ஞானஸ்நானம் எடுத்த பின்னர், தாங்கள் கிறிஸ்துவினுடையவர்கள் என்று கூறிக் கொண்டு, அவருடைய வார்த்தையின்படி தங்கள் கல்வி, வேலை, வியாபாரம், உறவு, நட்பு, திருமணம் போன்ற எல்லா விவகாரங்களை நடப்பிக்காமல், தங்கள் இஷ்டப்படி செய்து கொள்வதால், வாழ்க்கையிலே புயல் மோதும் போது, பாதகமான பின்விளைவுகளை சந்திக்கின்றார்கள். அந்த வேளையிலே, எங்களுக்கு ஏன் இப்படி நடந்தது என்று கேட்டுக் கொள்வார்கள். அவர்கள் மனந்திரும்பி, வார்த்ஜைதயிலே நிலைத்திருக்க ஒப்புக் கொடுக்கும் பட்சத்திலே, ஆண்டவராகிய இயேசுதாமே அவர்களை மீண்டும் கட்டுகின்றார். இரக்கத்தில் ஐசவரியமுள்ள தேவன் குறை குற்றங்களை மன்னித்து, பெலவீன வேளைகளிலேபுதுக்கிருபையை பொழிந்து அவர்களை நடத்துகின்றார். ஆனால், வார்த்தையிலே உறுதியாய் நிலைத்திருக்காமல், குந்திக் குந்தி நடக்கின்றவர்கள், பல நோவுகளை தங்களுக்கு தாங்களே ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். நீங்களோ அப்படியிராமல், உறுதியாய் வார்த்தையிலே நிலைத்திருங்கள். இனி வரும் கனமகிமை பெரியது.

**ஜெபம்:** கிருபை நிறைந்த தேவனே, நீர் கூறிய ஒவ்வொரு வார்த்தைகளையும் நான் தியானித்து, அதன்படி வாழும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து, உம்முடைய கிருபையினாலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

ஞாயிறு | டிசம்பர் 14

📖 மாலை வாசகம் - மத்தேயு 15:30

# போராட்டங்களிலே வெற்றி

ஆதியிலே ஆதாம் ஏவாள் தேவ மகிமையோடு ஏதேனிலே இருந்த போதும் அவர்கள் ஏக மனதுடன் தேவ பிரசன்னத்திலே வாழ்ந்து வந்தார்கள். அவர்களை குழப்புவதற்கோ, வேற்றுமையான உபதேசங்களை கூறுவதற்கோ, வேறு மனிதர்கள் யாரும் இருந்ததில்லை. அப்படியிருந்தும் பிசாசானவன் அவர்களை வஞ்சித்தான். காரியம் அப்படியாக இருந்தால், தேவ மகிமை இழந்த பல கோடிக் கணக்கா மனிதர்கள் வாழும் உலகத்திலே, அநேகர் வஞ்சித்து, பிரிவினைகளை உண்டாக்குவது இலகுவாக காரியமல்லவா? நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம் என்று *1 யோவான் 5:19* ம் வசனத்திலே வாசிக்கின்றோம். கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். கருப்பொருளாவது, நாம் தேவ ராஜ்யத்தை நோக்கி யாத்திரை செய்து கொண்டிருக்கும் நமக்கு பேராட்டங்கள் உண்டு. மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர் *6:12*). அப்படியாக போராட்டங்கள் இல்லை செழிப்பான வாழ்வு மட்டும் உண்டு என்று பிரசங்கிக்கின்றவர்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். வஞ்சிக்கும் ஆவிகள் கிரியை செய்து வருகின்றது. போராட்டங்கள் ஒன்றின் பின் ஒன்றாக வரும் ஆனாலும், மலைப்பிரசங்கததிலே ஆண்டவர் இயேசு கூறிய வார்த்தைகளை அறிந்தவர்கள், தேவனுக்கு பிரியமானவைகள் எவை என்றும், பொல்லாங்கனுடைய தந்திரம் இன்னதென்றும் அறிந்திருக்கின்றார்கள். அறிந்தவர்கள், தங்கள் வாழ்வை அந்த வார்த்தைகளின்படி அமைத்துக் கொள்ளும் போது, எப்படியாக போராட்டங்கள் வந்தாலும், எத்தகைய வஞ்சகங்கள் நம்மை நோக்கி வந்தாலும், அவையொன்றும் நம்மை மேற்கொள்ள முடியாது. எனவே, கோணலும் மாறுபாடுமான சந்ததியிலே வாழும் தேவ பிள்ளைகளே, உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்று ஆண்டவராகிய இயேசு கூறிய வார்த்தைகளை மறந்து போய்விடாதிருங்கள்.

**யோவான் 16:33**

**உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.**

**ஜெபம்**: போராட்டங்களிலே என்னை வெற்றி சிறக்க பண்ணுகின்ற தேவனே, உம்முடைய வார்த்தையின் மேன்மையை உணர்ந்து, உலகத்தை ஜெயம் கொள்ளும்படிக்கு என்னை உம் வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவினிமித்தம் வரும் பாடுகள்

> **1 பேதுரு 4:14**
>
> **நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்;**

பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள் ஏனென்றால்தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார் அவர்களாலே தூஷிக்கப்படுகிறார் உங்களாலே மகிமைப்படுகிறார். ஆதலால்உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படு த்தக்கடவன். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது. முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்? நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்? ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள் என்று ஆண்டவராகிய இயேசுவின் பிரதான சீஷனும், அப்போஸ் தலருமாகிய பேதுரு எழுதின முதலாம் நிரூபம் 4ம் அதிகாரம் 12ம் வசனத்திலிருந்து 19ம் வசனம்வரை வாசிக்கின்றோம். அன்று மட்டுமல்ல, இன்றும் நம் மத்தியிலே, புயல்கள் நம் வீட்டிலும் மோதும் என்றும், அஸ்திபாரங்கள் அசைக்கப்படும் என்றும் ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். அதாவது, நாம் தேவனிலே நிலைத்திருக்கும் வாழ்க்கையை குறித்து இங்கே ஆண்டவராகிய இயேசு ஒப்பனையாக கூறியிருக்கின்றார். தேவ வார்த்தையின்படி தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாதவர்கள், அஸ்திபாரம் இல்லாமல் தங்கள் வீட்டை கட்டினவர்களுக்கு ஒப்பாயிருக்கின்றார்கள். கன்மலையாகிய கிறிஸ்து வின் அஸ்திபாரம் போட்டப்பட்ட நீங்களோ, வாழ்வு தரும் சத்திய வார் த்தைகளை விட்டு ஒரு போதும் விலகிப் போகாதபடிக்கு, எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள்.

**ஜெபம்**: துன்மார்க்க உளையில் நின்று என்மை மீட்டெடுத்த தேவனே, நான் உம்முடைய வார்த்தையைவிட்டு விலகி, மறுபடியும் பாவ சேற்றில் விழுந்து விடாதபடிக்கு என்னை காத்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வாழ்வடையும் வழி…

மலைப்பிரசங்கத்திலே, நம்முடைய ஆண்டவராகிய இயேசு தாமே, வெற்றி வாழ்க்கை வாழ்வதற்கான வழிமுறையை கூறியிருக்கின்றார். கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையான அம்சங்கள் யாவையும் அதற்குள்ளே அடங்கியிருப்பதை நாம் இந்த வருட ஆரம்பத்திலிருந்து பார்த்து வருகின்றோம். ஆனாலும், அதன் முடிவிலே, இது ஒவ்வொரு விசுவாசியின் தனிப்பட்ட தெரிவு என்பதை ஆண்டவர் இயேசு தாமே தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். பழைய ஏற்பாட்டின் காலத்திலே, சீனாய் மலையிலே நியாயப்பிரமாணமானது கொடுக்கப்பட்ட போது, மோசே தேவனாகிய கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு கூறினான். நீயோ மனந்திரும்பி, கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடுத்து, நான் இன்று உனக்குக் கற்பிக்கிற அவருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் செய்வாய். அப்பொழுது உனக்கு நன்மை உண்டாகும்படி உன் தேவனாகிய கர்த்தர் உன் கைகள் செய்யும் எல்லா வேலைகளிலும், உன் கர்ப்பத்தின் கனியிலும், உன் மிருகஜீவனின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரணமுண்டாகச் செய்வார். நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறைபொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல. நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள்நிமித்தம் வானத்துக்கு ஏறி, அதை எங்களுக்குக் கொண்டுவருகிறவன் யாரென்று நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுள்ளதும் அல்ல. நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள்நிமித்தம் சமுத்திரத்தைக் கடந்து, அதைக் கொண்டுவருகிறவன் யார் என்று நீ சொல்லத்தக்கதாக, அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல. நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது. நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள்மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன் ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு அவரைப் பற்றிக் கொள்வாயாக என்று கூறினான். அதே பிரகாரமாக மலைப் பிரசங்கத்தின் முடிவிலே வாழ்விற்கும் அழிவிற்கும் உரிய தெரிவானது விசுவாசிகளாகிய நம்முடைய கரங்களிலே உண்டு என்பதை ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார்.

**உபாகமம் 30:15**

**இதோ, ஜீவனையும் நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்காக என்னை அழைத்த தேவனே, நான் வாழ்வடையும்படிக்கு இந்த பூமியிலே வாழும் நாட்களிலே உம்முடைய வார்த்தையை கேட்டு அதன்படி நடந்து, உம்மை பற்றிக் கொள்ள எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எதிர்பார்த்த பலனைக் காணவில்லை?

ஏன் மனிதர்கள் ஆலோசனைகளை பெறும்படி ஆலோசகர்களை நாடித் தேடுகின்றார்கள்? தவறான தீர்மானங்களால், தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் இக்கட்டான சூழ்நிலைகள மற்றும் மனக் குழப்பங்கலி ளிருந்து விடுதலைக்கான வழியை கண்டுபிடிக்கும்படியாவும், தவறான தீர்மானங்களால் ஏற்படும் பின்வி ளைவுகளின் நஷ்டத்தை குறைக் கவும், யாகும்படியாகவும் அல்லது தங்கள் வாழ்க்கையிலே குறிப்பிட்ட விடயத்தைக் குறித்து தவறான தீர் மானங்களை எடுத்துக் கொள்ளாமல் இருக்கவும் போன்ற பிரச்சனைக ளுக்காக பற்பல விடயங்களிலே பாண்டித்தியம் பெற்ற நிபுணர்களை நாடுகின்றார்கள். சட்டத்துறை, மருத்துவ துறை, நிதி நிர் வாகத்துறை, கல்வித்துறை, தொழித்துறை, விளையாட்டுத் துறை போன்ற பற்பல துறைகள் இவற்றுள் அடங்கும். இவைகளினாலே பலன் இல்லை என்று எவரும் கூறிவிடமுடியாது. ஆனால், இவைகளினாலே மனிதர்களுக்கு மனச் சாமாதனம் கிடைக்கும் என்பதும் நிச்சயம் அல்ல. எடுத்துக்கா ட்டாக, கல்வியிலே சிறந்து விளங்கும் மாணவனொருவன், தன் பெற் றோரோடு தன் எதிர்காலத்தைக் குறித்த ஆலோசனைக்காக ஒரு நிபுண ரிடம் சென்றிருந்தான். அவர் அந்த துறையிலே நன்றாக பாண்டித்தி யம் பெற்றவரும் அனுபவமிக்கவருமாக இருந்தார். அந்த மாணவனின், கடந்த கால சாதனைகளையும், நிகழ்கால திறமைகளையும், தான் அறி ந்த எதிர்கால சூழ்நிலைகளையும் மையமாக வைத்து, எந்தத் துறை யிலே அந்த மாணவன் கல்வி கற்ற வேண்டும் என்று ஆலோ சனை கூறினார். அதன்படி அந்த மாணவனும் கல்விகற்று, மேற்படி ப்பையும், பட்டப்படிப்பையும் முடித்து, குறிப்பிட்ட துறையிலே நல்ல வேலைக்கு அமர்ந்தான். அந்த நிபுணர் கூறிய ஆலோசனை நன்றாகவே இருந்தது. ஆனால், அவனுக்கோ தான் செய்யும் வேலைக் குறித்த மனச்சமா தானம் இல்லை. பிரியமான சகோதர சகோதரிகளே, உங்கள் திட்டங்க ளிலே மேலான ஆலோசனைகளை தள்ளிவிடாதிருங்கள். சமாதான காரணராகிய ஆண்டவர் இயேசு வழியாகவேயன்றி மனிதர்களுக்கு மெய்ச் சமாதானம் உண்டாவதில்லை. எனவே, எல்லா காலங்களையும் அறிந்தவரும், மனிதர்களுடைய இருதங்களை ஆராய்தறிகின்றவரும், நம்மை சிருஷ்டித்தவருமான சர்வ வல்லவருடைய ஆலோசனையை பின்பற்றுங்கள். அந்த ஆலோசனையிலே நிரந்தர சமாதானம் உண்டு.

**சங்கீதம் 33:11**

**கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும், அவரு டைய இருதயத்தின் நினை வுகள் தலைமுறை தலை முறையாகவும் நிற்கும்.**

**ஜெபம்:** சமாதான காரணராகிய தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய ஆலோசனைகளை தள்ளிவிடாமல், அவைகளையே என் வாழ்விலே முதன்மைப்படுத்திக் கொள்ள ஞானத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# காரணமில்லாத மனக்குழப்பங்கள்

ஒரு ஊரிலே உத்தமாக வாழ்ந்து வந்த விசுவாசியானவன், அந்த ஊரிலுள்ள மனிதர்கள் மத்தியிலே நற்சாட்சி பெற்றிருந்தான். ஒரு நாள், அந்த ஊரில், அயலிலே வாழ்ந்த மனிதனொருவன், காரணமின்றி இந்த விசுவாசியாவனை குற்றம்சாட்டி, அவன் குடும்பத்தாரை பரியாசம் பண்ணி அவனுக்கு பெருந் துன்பத்தை ஏற்படுத்தினான். அந்த விசுவாசி யானவனோ மறுபேச்சு எதையும் கூறாமல், தன் வழியே போய்விட்டார். ஊரில் வாழ்ந்த சில மனிதர் கள், அந்த விசுவாசியாவனை நோக்கி: ஏன் அந்த துன்மார்க்கனை அப்படியே விட்டுவிட்டாய்? அவனுக்கு உணர்வு வரும்படிக்கு சில வார்த்தைகளை நீ சொல்லி இருக்க வேண்டும். அவனுக்கெதிராக நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும் என்றார்கள். அவனோ, பழிவாங்குதல் எனக்குரியதல்ல, அவனை தேவன் பார்த்துக் கொள்வார் என்று கூறி, முன்பு போலவே தன் வாழ்க்கை வாழ்ந்து வந்தான். ஆனாலும், மாதங்கள் பல கடந்து சென்றபின்கும், அந்த சம்பவம் நடந்த நாளிலிருந்து அவன் மனதிலே நிம்மதியில்லை. அந்த துன்மார்க்கனை காணும் போதெல்லாம், அவன் தன் குடுத்பத் தாரைக் குறித்த கூறிய நிந்தையான வசனங்களை ஞாபகத்திற்கு வந்த தால், அவன் மனதிலே கோபமடைந்தான். ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, அந்த விசுவாசியானவன் மட்டுமல்ல, அநேக விசுவாசி கள் தங்கள் வாழ்நாட்களிலே இப்படியான பல சூழ்நிலைக்குள் தள்ளப் பட்டு, காரணமில்லாத மனக் காயங்களோடு, மனச் சமாதானத்தை இழந்து வாழ்ந்து வருகின்றார்கள். ஆண்டவராகிய இயேசு தாமே மலைப்பிரசங்கத்திலே இவ்வாறாக கூறியுள்ளார்: "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங் கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்து கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்." இதுவே மனக் கசப்பு நீங்கி, சமாதானமான வாழ்வடைவதற்கு, மனப்புண்களை ஆற்றும் அருமருந்தாக இருக்கின்றது. இது மனித பெலனத்தினால் கூடாதது. ஆனால், நமக்குள் வாழும் துணையாளராகிய சத்திய ஆவியானவர், இதை செய்வதற்கு நமக்கு பெலன் தந்து நடத்துகின்றவராய் இருக்கின்றார். அவருடைய வார்த்தையின்மேல் தன் வாழ்வை அமைத்துக் கொண்டவன் இவை யாவற்றையும் மேற்கொள்ளுகின்றவனாக இருக்கின்றான்.

**மத்தேயு 5:44**

**உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, என்னுடைய சுத்த மனசாட்சி உணர்வற்றுப் போய்விடாதபடிக்கு, உம்முடைய ஒவ்வொரு வார்த்தைகளையும் தகுந்த வேளையிலே தியானித்து நடைமுறைப்படுத்த எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆரோக்கியமான ஆலோசனைகள்

வாழ்விலே எதிர்பாராத இடங்களிலே இருந்து நெருக்கங்கள் ஏற்படும் போது, அவை மனதிலே தாங்கொண்ணா வேதனையை உண்டாக்கிவிடு கின்றது. துன்மார்க்கரிடம் இருந்து வரும் தீவினைகளை கண்டு மனிதர் கள் ஆச்சரியப்படுவதில்லை. பாவிகளுடைய வழியில் அலங்கோலங்க ளை காணும் போது, அவனிடமி ருந்து வேறு என்னத்தை எதிர்பா ர்கலாம் என்று கூறிக் கொள்வா ர்கள். பரியாசக்காரரின் வாயின் வார்த்தைகளை மனிதர்கள் கேட் கும் போது, பானையிலுள்ளது தான் அகப்பையிலே வரும் என்று சொல்லிக் கொள்வார்கள். ஆனால், விசுவாச மார்க்கத்தார் என்று தங்களை சொல்லி கொண்டு வாழும் மனிதர்களிடமிருந்து நெருக்கங்கள் ஏற்படும் போது, அதனால் உண்டாகும் நோவு அதிகமாக இருக்கும் அல்லவா? அந்த வேளையிலே, விசுவாசிகள் தங்களுக்கு பிரியமானவர்கள் அல்லது ஆதரவாயிருப்பவர்களை நாடித் தேடுகின்றா ர்கள். அவர்கள் கூறும் இனிய வார்த்தைகளை ஒருவேளை அவர்கள் மனதிற்கு தற்காலிகமான விடுதலையை உண்டாக்குகின்றது. பிரியமான சகோதர சகோதரிகளே ஆலோசனைகளை நாடித் தேடுவது, சில சந்தர் பங்களிலே அவசியமானது. ஆனால், நமக்கு ஆலோசனை கூறுகின்ற வர்கள், தங்கள் வாழ்விலே எந்த சூழ்நிலையிலும், தங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும், அசையாமல் உறுதியாய் இருந்து, கர்த்தர் சத்திய வார் த்தைகளை சுத்தமாக பேசுகின்றவர்களிடமிருந்தே ஆலோச னையை பெற்றுக் கொள்ள வேண்டும். "குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே" என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். தொல்லைகள், கஷ்டங்கள் சூழ்ந்து கொள்ளும் போது, எங்களைவிட அதிகமாக மனக் குழப்பத்திலே இருக்கின்றவர்க ளிடம் ஆலோசனைக்கு சென்றால், குருடனுக்கு குரடன் வழிகாட்டு வதைப் போலவே மாறிவிடும். எனவே, நாம் தவறான ஆலோசகர்கள் அல்லது கள்ளப் போதகர்கள் போன்றவர்களிடம் அகப்படாதபடிக்கு, தேவனுடைய பாதத்திலிருந்து, வேதத்தை தியானித்து, ஜெபிக்க கற்றுக் கொள்ள வேண்டும். தியானமும், ஜெபம் நம் அனுதின வாழ்விலே நடைமுறையில் இல்லாவிட்டால், பெரும் புயலானது நம் வாழ்க்கை படவிலே மோதி அடிக்கும் போது, நாம் தவறான தீர்மானங்களை எடுத்துக் கொள்ள நேரிடும். எனவே கர்த்தருடைய வேதத்திலே இரவும் பகலும் தியானமாயிருங்கள். ஊக்கமாக ஜெபம் செய்யுங்கள்.

**சங்கீதம் 1:2**

**கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, உம்மிடத்திலே நான் ஆலோசனையை பெற்றுக் கொள்ளும்படியாக, உம் வார்த்தைகளை தியானித்து, அவைக ளினல் நிலைந்து, ஏற்ற காலத்திலே கனியை கொடுக்கும்படிக்கு என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

சனி | டிசம்பர் 20

📖 மாலை வாசகம் – எரேமியா 2:21

# கனி கொடுக்கும் ஏற்ற வேளை

ஒரு கிராமத்திலே வாழ்ந்து வந்த விவாசாயினொருவன், தன் தோட்ட த்திலே, தரமான திராட்சைசெடியை நட்டு, அதை நன்றாக பராமரித்து வந்தான். அது கனிகொடுக்கும் நாட்கள் வந்தபோது, அதில் கனியை காணவில்லை. ஒருவேளை அடுத்த பருவத்திலே கனி கொடுக்கும் என்ற நம்பிக்கையுடன், அதற்கு இன்னும் எருபோட்டு, தொடர்ந்தும் பராமரித்து வந்தான். அடுத்து பருவத்திலே அது கனி கொடுத்தது. ஆனால், கனியை ருசிக்கும் நாட்கள் வந்தபோது, அதன் கனிகள் மிகவும் புள்ளிப்புள்ளதாக இருந்தது. கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, ஏற்ற காலத்தில் கனி கொடுப்து என்பதன் கருப் பொருள் என்ன? திராட்சை செடியை பற்றிய கேள்வியல்ல, இது தேவனுடைய பிள்ளைகளைக் குறித்த கேள்வி! ஒரு வாலிபனானவன், சிறு வயதிலிருந்து தவறாமல் ஆலயத்திற்கு சென்று, வேதபாடங்களை கற்று, உதவி ஊழியங்களை செய்து வந்தான். தேவனைப் பற்றி அறியும் அறிவுக்கு வந்தபோது, விசுவசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான். அவன் இருபது வயதையடையும் போது, ஒரு நாள் மாலை, அவனுடைய நண்பர்களில் சிலர், அவனை இரவு களியாட்ட விடுதிக்கு வரும்படி அழைத்தார்கள். இவ்வளவுகாலமும் தவறாமல் ஆலயத்திற்கு சென்று வந்தாயே, ஒருநாள் இன்று எங்களுக்காக எங்களுடன் வந்து, உல்லாசமாக இருந்தால் என்ன என்று வருந்திக் கேட்டுக் கொண்டார்கள். அந்த வாலிபனோ அவர்களை நோக்கி: இருபது வருடங்களாக வளர்க்கப்பட்ட மரம், இன்று இப்போது கனி கொடுக்கின்ற வேளை என்று அவர்களுக்கு கூறிவிட்டு, தன் வீட்டிற்கு சென்று விட்டான். அந்த வாலிபனின் வாழ்க்கையைப் பாருங்கள்! வாழ்நாட்களிலே ஒருநாள், இந்தநாள் மட்டும் என்று இன்று பலர் கனிகொடுக்க வேண்டிய வேளைகளில் கனி கொடுக்காமலும், வேறு சிலர், மிகவும் புளிப்பான கனிகள், அதாவது, தங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி, வேத வார்த்தைகளை சுட்டிக்காட்டி, தங்கள் தவறான வழிகளை நியாயப்படுத்த முயற்சிக்கின்றார்கள். நீங்களோ, கனி கொடுக்கும் வேளைகளை தவறவிட்டுவிடாதிருங்கள். தனிப்பட்ட வாழ்வில், கும்பத்தில், உறவுகள் மத்தியில், பாடசாலையில், நண்பர்கள் மத்தியில், வேலை செய்யும் இடங்களில், சபையில் கனி கொடுக்கும் வேளை இன்னதென்பதை அறிந்து சுவையான கனிகளை கொடுங்கள்.

**எரேமியா 17:8**

**மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனிகொடுக்கிற துமான மரத்தைப்போலிருப்பான்.**

**ஜெபம்:** அன்பின் பிதாவே, திராட்சைnடியாகிய கிறிஸ்து இயேசுவிலே நிலைத்திருக்கும் கிளையாக, நல்ல கனிகளை, ஏற்ற வேiயிலே கொடுக்கும்படிக்கு, உம்முடைய வார்த்தையின் வெளிசத்திலே என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# புத்தியுள்ள மனுஷன்

தேவனுடைய வார்த்தையை கேட்டு, அதை தன் வாழ்விலே இரவும் பகலும் தியானம் செய்து, அதன்படி வாழ்கின்றவனின் வாயின் வார்த்தைகள் தேவனுக்கு ஏற்புடையதாகவும், இருதயத்தின் நினைவுகளின் தோற்றும் நன்மையானதாகவும் இருக்கும். தேவனுடைய வார்த்தையை கேட்டும், அவைகளை அற்பமாக எண்ணி, தன் இஷ்டபடி பேசுகின்றவனின் இருதயத்தின் நினைவுகளின் தோற்றும் தேவனுக்கு ஏற்புடையதாக இல்லாததினாலே, முடிவிலே அவைகள் பொல்லாப்புக்குரியதாகவே மாறிவிடும். அக்காலத்திலே நோவா என்னும் ஒரு தேவ பக்தன் வாழ்ந்து வந்தான். அன்றிருந்த உலகிலே, அவனும் அவனுடைய குடும்பத்தார் மாத்திரமே தேவனுக்கு பிரியமாக வாழ்ந்து வந்தான். அக்கிரமம் மலிந்து போயிருந்து உலகிலே நீதியைப் பிரசங்கித்தி வந்தான். ஆனால், மற்றவர்கள் யாவரும், தேவனுடைய வார்த்தையைக் கேட்டும் அதை அசட்டை செய்து, ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண்கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள். அதாவது தங்கள் கண்போன வழிகளிலே வாழ்ந்து தங்களுக்கு இஷ்டமாக வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்கள். நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் மறுபடி வரும் காலத்திலும் நடக்கும் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். நோவாவின் பேழைக்கு ஒப்பாக தேவனாகிய கர்த்தரே நம்முடைய புகலிடமா இருக்கின்றார். தேவ வார்த்தையில் நிலைத்திருப்பது இந்த உலகத்திற்குரியது மட்டுமல்ல. முதன்மையாக அது நித்திய ஜீவனுக்குரியது. ஒருவேளை தேவனுடைய வார்த்தையை கேட்டு அதன்படி உண்மையும் உத்தமுமாக வாழ்கின்றார்கள் உபத்திரவங்களை சந்திக்க நேரிடலாம். பூமியிலே ஏற்படும் வெள்ளம் அவர்களை வாரிக்கொண்டு சென்றாலும், தேவனுடைய வார்த்தையை கேட்டு, அவைகளின்படி செய்கின்ற எவனோ, அவன் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனாக இருக்கின்றார். இந்த உலகத்திலே ஏற்படும் மரணம் அவனுக்கு தீமைக்குரியதல்ல. மாறாக அது நித்திய ஜீவனுக்குரியதாகவே இருக்கின்றது.

**ஏசாயா 32:2**

**அவர் காற்றுக்கு ஒதுக்காகவும், பெருவெள்ளத்துக்குப் புகலிடமாகவும், வறண்ட நிலத்துக்கு நீர்க்கால்களாகவும், விடாய்த்த பூமிக்குப் பெருங்கன்மலையின் நிழலாகவும் இருப்பார்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, நான் இந்த உலகத்திலே வாழ்ந்தாலும், கடந்து சென்றாலும் நீரே என்னுடைய நித்திய புகலிடம் என்று நம்பிக்கை என்னைவிட்டு நீங்காதபடிக்கு, எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எதற்காக இயேசுவை சேவிக்கின்றோம்?

ஒரு சமயம், ஆண்டவராரிய இயேசுவும் அவருடைய சீஷர்களும், பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக்கொண்டாள். அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள் அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் அக்கறையில்லையா? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார். பாருங்கள், மார்த்தாள் இயேசுவை தன் வீட்டிலே ஏற்றுக் கொண்டாள். ஆண்டவராகிய இயேசுவே, உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்பதை அவள் விசுவாசிக்கிருந்தாள் (யோவான் 11:27). தங்கள் வீட்டிற்குள் வந்த மெசியாவை உபசரிக்க வேண்டும் என்று பெரும் பிரயாசப்பட்டாள். ஆண்டவரை உபசரித்து, அவரைக் கனப்படுத்த வேண்டும். அவர் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேலை செய்தாள். அன்றைய நாளிலே, அவளுக்கு ஒரு இரகசித்தை வெளிப்படுத்தினார். தான் இந்த உலகத்திற்கு மனிதர்களுடைய உபசாரத்தை நாடி வரவில்லை என்பதை தெளிவாக காண்பித்தார். நித்திய ஜீவனை கொடுக்கும் வசனத்தை தம்மை விசுவாசிக்கின்றவர்கள் ஆவலோடு கேட்டு, அந்த வசனத்திலே நிலைத்திருக்க வேண்டும் என்பதை தெளிவு படுத்தினார். தேவனை எதினால் பிரியபடுத்தமுடியும் என்பதை காண்பித்தார். நாம் நல்ல பங்கை தெரிந்து கொண்டு, அதற்படி வாழும் போது, ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திற்கு வந்த நோக்கம் நம்மிலே நிறைவேறும். எனவே மீட்பர் இயேவுவின் பிறப்பை நினைவு கூரும் இந்த நாட்களிலே, இம்மைக்காக மாத்திரம் நாம் இந்த உலகிற்கு வந்த மீட்பராகிய இயேசுவை சேவிக்காமல், நித்தியத்திற்காக அவரிலே நாம் நிலைத்திருக்க வேண்டும்.

**லூக்கா 10:42**

**தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இராமல், நித்திய ஜீவனுக்காக நான் கிறிஸ்துவை பற்றிக் கொண்டிருக்க உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மரித்தாலும் பிழைப்பான்....

பெத்தானியா என்னும் ஊரிலே, மார்த்தாள் மரியாள் என்னும் இரு சகோதரிகளும், அவர்களுடைய சகோதரனான லாசருவும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் ஆண்டவரரிய இயேசுவை தங்கள் வீட்டிலே ஏற்றுக் கொண்டார்கள். இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார். அவர் சிநேகித்து வந்த லாசரு வியாதியாய் இருக்கிறான் என்று பெத்தானியாவிற்கு திரும்பினார். இயேசு அவ்விடத்திற்கு வருவதற்கு முன்பதாகவே லாசரு மரித்துவிட்டான். இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்பட்டபோது, அவருக்கு எதிர்கொண்டுபோனாள் மரியாளோ வீட்டிலே உட்கார்ந்திருந்தாள். மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து: ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதை தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள். இயேசு அவளை நோக்கி: உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார். அதற்கு மார்த்தாள்: உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள். இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் இதை விசுவாசிக்கிறாயா என்றார். அதற்கு அவள்: ஆம், ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன் என்றாள். பிரியமானவர்களே, இந்த உலகிலே நமக்கு உபத்திரவங்கள் ஏற்படலாம். சில வேளைகளிலே, இயற்கை அனர்த்தங்கள், யுத்தங்கள், விபத்துக்கள் விசுவாசிகளையும் வாரிக் கொண்டு போகின்றதே என்று குழப்பமடை யாதிருங்கள். துக்கம் மனதிலே இருக்கும் ஆனால் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எவ்விதமான பெரு மழையோ, புயலோ மோதித்த தாக்கினாலும், விசுவாசத்திலே உறுதியாய் இருக்கின்றவன் அசைக்கப்படுவதில்லை. அவன் இந்த உலகிற்கு மறைந்து போனாலும், பரலோகிலே நித்திய வாழ்வை பெற்றுக் கொள்கின்றான். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருங்கள். நித்திய வாழ்வை பெற்றுக் கொள்ளுங்கள்.

**யோவான் 11:25**

**நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்;**

**ஜெபம்**: என்னை வேறுபிரித்த தேவனாகிய கர்த்தாவே, நிலையற்ற உலகிலே வாழும் நான், நிலையான நகரமாகிய பரலோகத்தை நோக்கி செல்கின்றேன் என்ற உறுதியான விசுவாசத்தோடு வாழும்படிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவ வார்த்தை நிறைவேறட்டும்....

விசுவாசிகள் பிதாவாகிய தேவனை நோக்கி ஜெபிக்கும் போது, தங்கள் தேவைகளை அவரிடத்திலே தெரிப்படுத்துகின்றார்கள். சில வேளைகளிலே, அந்த தேவைகளை சந்திக்கும் வழியை தங்கள் இருதயத்திலே நிர்ணயம் செய்தவர்களாய், அந்த வழியிலே தங்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றார்கள். எடுத்துக் காட்டாக, பொருளாதார நெருக்கடியிலிருக்கும்விசுவாசி, பதவி, சம்பள உயர்வுடன் ஒரு குறிப்பிட்ட வேலையை, குறிப்பிட்ட கம்பனியிலேபெற்றுக்கொள்ள வேண்டும்என்று மனஉறுதியுடன் ஜெபிக்கின்றான். ஆனால், அந்த வேளையிலே அது அவனைக் குறித்த தேவனுடைய சித்தமோ இல்லை என்பதைக் குறித்து சிந்திப்பதில்லை. இந்த சந்தர்பத்திலே மாத்திரமல்ல, வெவ்வேறான பல சூழ்நிலைகளிலும், எனக்கு இப்படித்தான் ஆக வேண்டும் என்று உபவாசித்து கூட ஜெபிக்கின்றார்கள். ஆனால், உம்முடைய சித்தப்படி எனக்கு செய்யும் என்று மனதார அர்பணிப்போடு வேண்டுதல் செய்பவர்கள் எத்தனை பேர்? எத்தனை பேர் என்ன கணக்கைக் குறித்து சிந்திக்காமல், இயேசுவின் பிறப்பை நினைவு கூரும் இந்நாட்களிலே, என்னுடைய மனநிலை இன்று எப்படி இருகின்றது என்பதை ஆராய்ந்து பார்ப்பது நல்லது. விசுவாசிகளாகிய பெற்றோர் தங்கள் பிள்ளைகளை குறித்து வேண்டிக் கொள்ளும் போது, எப்படியாக ஜெபிக்கின்றார்கள்? கல்வியிலே சிறந்து விளங்க வேண்டும். பெரிய உத்தியோகங்கள் செய்ய வேண்டும். கைநிறைய உழைக்க வேண்டும் என்று பல காரியங்களுக்காக ஊக்கத்துடன் இடைவிடாமல் ஜெபிக்கின்றார்கள். ஆனால், என்னுடைய பிள்ளை உம்முடைய ஊழியத்தை செய்ய வேண்டும் என்று இன்று எத்தனை பேர் ஜெபிக்கின்றார்கள்? என்னுடைய பிள்ளை தேவ ஊழியனாக வந்தான் கஷ்டப்படுவான். எனவே அவன் தேவ ஊழியனாக வரக்கூடாது என்று எத்தனை பேர் மனதிலே தீர்மானம் செய்து கொள்கின்றார்கள். ஆனால் இயேசுவின் தாயாகிய மரியாளோ, தனக்கு இன்னவிதமாய் நடக்க போகின்றது என்பதை தெளிவாக அறியாதிருந்த போதும், தன்னை தேவ சித்தத்திற்கு பூரணமாக ஒப்புக்கொடுத்தால். தேவனுடைய வார்த்தையின்படி எனக்கு ஆகட்டும் என்று தன்னை அர்பணித்தாள். அதுபோல எங்கள் வாழ்விலும், எங்கள் பிள்ளைக ளுடைய வாழ்விலும் தேவனுடைய வார்த்தை நிறைவேற வேண்டும் அர்பணிப்பு எங்கள் வாழ்விலும் பெருகும்படியாக முன்னேறிச் செல்வோமாக.

**லூக்கா 1:38**

**அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, என்னுடைய மாமிச எண்ணங்கள் என்னை மேற்கொள்ளாதபடிக்கு உம்முடைய சத்திய ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு ஒப்புக் கொடுத்து வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| வியாழன் \| டிசம்பர் 25 | 📖 மாலை வாசகம் – லூக்கா 2:9–11 |
|---|---|

# வெளிச்சம் பிரகாசித்தது

“உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன் அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்ற தேவனுடைய வார்த்தையானது நிறைவேறும்படிக்கு, வாக்களிக்கப்பட்ட மெசியா இந்த பூமிக்கு வரும் நாளை, தேவ பக்தர்கள் கால காலமாய் எதிர்பார்த்திருந்தார்கள். தேவ ஜனங்களை அடிமைத்தனதிலிருந்து வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு வழிநடத்திச் சென்ற தேவனுடைய தாசனாகிய மோசே, ஜனங்களை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக என்றான். நிறைவேற இருக்கும் வாக்குதத்தை குறித்து தீர்க்கதரிசிகள் வழியாக தேவனாகிய கர்த்தர்தாமே முன்னுரைத்தார். “நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும் அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்” என்று வரவிருக்கும் வாக்களிப்பட்ட மெசியாவைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி முன்னுரைத்தார். தேவன் முன் குறித்த நாள் வந்த போது, தம்முடைய வாக்குதத்தை நிறைவேற்றினார். தம்முடைய வார்த்தையை நிறைவேற்றும் பொருட்டு, தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்பவரையும் அவருக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த கன்னிகையாகிய மரியாளைாகிய அருமையான இரண்டு பாத்திரங்களை தெரிந்தெடுத்தார். குறித்த நாள் வந்த போது, தேவ தூதர்கள் அந்த செய்தியை உறுதிப்படுத்தினார்கள். அந்த செய்தியானது விண்ணகதிலிருந்து மந்தை ஆயர்களுக்கு வெளிப்டுத்தப்பட்டது. தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள் இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் என்று கூறி தேவனைத் துதித்தார்கள். ஆண்டவராகிய இயேசுவின் முதலாம் வருகை நிறைவேறியதை இந்த நாளிலே நாம் நினைவு கூர்ந்து, பரம பிதாவை துதிக்கின்றோம். அவருடைய இரண்டாம் வருகையின் நாளை எதிர்பார்த்து அவருடைய வார்த்தையில் கட்டப்பட்டவர்களாக நிலைத்திருப்போமாக.

**ஏசாயா 9:2**

**இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது.**

**ஜெபம்:** உம்முடைய வாக்கிலே உண்மையுள்ள தேவனே, என் ஆத்துமாக பாதாளத்திலே அழிந்து போகாதபடிக்கு உம்முடைய திருக்குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பியதற்காக நன்றி செலுத்துகின்றேன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறிஸ்மஸ் ஆயத்தங்கள்

கிறிஸ்மஸ் நாளை முன்னிட்டு, எல்லா மனிதர்களும் ஏதோ ஒரு விதத் திலே ஆயத்தப்படுகின்றார்கள். சிலர் கிறிஸ்மஸ் நாளை முன் னிட்டு, தானதர்மங்களை செய்ய வேண்டும் என்று சில மாதங்களுக்கு முன்னா ரகவே ஆயத்தங்களை செய்வார்கள். பல்வேறு மட்டங்களிலே, ஏழைக் குடும்பங்களிலே இருக்கும் சிறு பிள்ளைகளின் முகத்திலே, கிறிஸ் மஸ் நாளிலே முக மலர்சியை உண்டு பண்ண வேண்டும் என்று அவர்களுக்கு பரிசுப் பொருட்க ளை ஆயத்தப்படுத்துகின்றார்கள்.

**2 பேதுரு 3:12**

**தேவனுடைய நாள் சீக்கிர மாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்;**

அதாவது, தங்களிடம் இப்பவை களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதும், கிறி ஸ்துவின் அன்பை மற்ற வர்களு க்கு வெளிக்காட்ட வேண்டும் என்பதும் சிலரின் நோக்கமாக இருக்க லாம். ஆலயங்களிலே நத்தார் நிகழ்சி என்று இயேசுவின் பிறப்பை சித்திரித்து காண்பி க்கும்படி, பாடல்களை பாடி, நாடகங்களை நடித்து, பிள்ளைகளுக்கு பரிசுப்பொருட்களை கொடுத்து, மேலும் பற்பல உதவி திட்டங்களை செய்து அந்த நாளை சிறப்பிக்கின்றார்கள். இவைகளிலே நன்மைகள் இல்லை என்று யாரும் நிராகரிப்பதில்லை. வேறு சிலர், குடு ம்பங்களாக, நண்பர்களாக, சக வேலையாட்களாக சிறு குழுக்களாய் சேர்ந்து, கிறிஸ்மஸ் நாளிலே, நாங்கள் உண்டு, குடித்து, வெறித்து சந் தோஷமாக நாளை களிக்க வேண்டும் என்று, ஒன்றுகூடல்கள், கொண் டாட்டங்கள், களியாட்டங்கள் என்று பல்வேறு நிகழ்ச்சிகளை தங்கள் தங்கள்வசதிக்கேற்பஆயத்தப்படுத்துகின்றார்கள். மெசியாவாகிய இயேசு தாமே, எத்தகைய மாம்ச இச்சைகளிலிருந்து மனிதர்களில் விடுதலைய டைய வேண்டும் என்று கூறினாரோ, அவைகள் யாவையும் அந்நா ளிலே, திட்டமிட்டு மனப்பூர்வமாக நடத்தி முடிக்கின்றார்கள். கருப்பொரு ளாவது, கிறிஸ்மஸ் நாளை முன்னிட்டு, சில இடங்களிலே நன்மையான காரியங்களும், சில இடங்களிலே தீமைக்கு வழிவகுக்கும் களியாட்டங் களும் நடைபெற்று வருகின்றது. இதனால், இரண்டு சாராரும் தாங்கள் கிறிஸ்மஸ் நாளை முன்னிட்டு ஏதோ ஒன்றை செய்தோம் என்று மனத்திருப்தியடைகின்றார்கள். கிறிஸ்மஸ் ஆயத்தம் என்பது இது தானா? உங்கள் வாழ்விலே கிறிஸ்வின் பிறப்பின் மேன்மை இதுதானா? பிரியமானவர்களே, முதலாவதாக, மீட்பராகிய இயேசு இந்த உலகிற்கு வந்த நோக்கம் எங்களிலே நிறைவேற நாங்கள் இடங்கொடுக்க வேண்டும். பிதாவின் அநாதி தீர்மானம் நம்மில் நிறைவேற வேண்டும். இரண்டாம் வருகையிலே ஆண்டவர் இயேசுவை சந்திக்க ஆயத்த ப்பட வேண்டும்.

**ஜெபம்:** அன்பின் பிதாவே, உம்முடைய ஒரேபேறான குமாரனாலே நான் பிழைக்கும்படிக்கு அவரை இவ்வுலகத்திற்கு அனுப்பினீர் என்பதை மறந்து போகாமல், உம்வார்த்தையிலே நான் எப்போதும் நிலை த்திருக்க கிருபை செய்வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பிறனுக்கானவைகளை நோக்குவாயாக...

"அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக." என்பதன் கருப்பொருள் என்ன? மற்றவர்களுடைய தேவைகளை கருதிற்கொண்டு, எப்போதும் நன்மையான செயற்திட்டங்களை செய்து, பல்லாரயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஏழை எளியவர்களுக்கும் மற்றவர்கள் யாவருக்கும் தானதர்மங்களை செய்வதென்பா? இத்தகைய செயல்கள் ஒவ்வொரு வாழ்விலே கனியாக உருவாக வேண்டும் என்பது உண்மை. ஆனால், தேவ அன்பு இல்லாதவர்களும் இத்தகைய செயல்களை, ஒரு விசுவாசியைவிட பன்மடங்காக நடப்பிக்க முடியும். "எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை." என்று 1 கொரிந்தியர் 13ம் அதிகாரம் 3ம் வசனத்திலே வாசிக்கின்றோம். பிரியமான சகோதர சகோதரிகளே, சுயநலமற்ற வாழ்க்கையானது கிறித்தவ வாழ்க்கையின் அடித்தளமாக இருக்கின்றது. "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடினபொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்." எனவே, கிறிஸ்து இயேசுவைப் போல கீழ்படிவும், மனத்தாழ்மையும் தன்னை விசுவாசி என்று அழைக்கும் ஒவ்வொருவனுக்கும் இருக்க வேண்டும். எதற்கு கீழ்படிய வேண்டும்? எதை மனத்தாழ்மையோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்? தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து, அந்த வார்த்தையை மனத்தாழ்மையோடு ஏற்றுக் கொண்டு, அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட வேண்டும். எப்படி அதை நடைமுறையிலே காண்பிப்பது? மலைப் பிரசங்கத்திலே ஆண்டவர் இயேசு கூறிய வார்த்தைகளை நினைத்துப் பாருங்கள். இரக்கத்தையும் மன்னிப்பையும் யாவருக்கும் தாராளமாக வழங்கும் தேவனுக்குள் ஐசுவரியமுள்ளவர்களாக வளர்ந்து பெருகுங்கள். "தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்."

**பிலிப்பியர் 2:12**

**அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்.**

**ஜெபம்**:அன்பின் பரலோக தேவனே, உலகம் முழுவதையும் ஆதயப்படுத்தி என் ஆத்துமாவை நான் இழந்து போகாதபடிக்கு, அதிக ஜாக்கிரதையோடு இரசிப்பு நிறைவேற பிரயாசப்பட நீர் என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் - பிலிப்பியர் 2:1 – 3

# மனத்தாழ்மையை கற்றுக் கொள்ளுவோம்

ஒரு சபையிலே அருமையாக உதவி ஊழியங்களை செய்து வந்த வாலிபனொருவன், தவறான காரியமொன்றை செய்து விட்டான். இந்த உலகத்திலே எவரும் செய்யாத குற்றங்களை அல்ல, வழமையாக விசுவாசிகளில் பெரியோர், சிறியோர் என்று தங்களை கருதிக் கொள்ளும், யாவரைப் போலவுமே, ஒரு சந்தர்பத்திலே தவறாக பேசிவிட்டான். அந்த சபையின் மேய்ப்பர் அவனை தனிப்பட அணுகி, அவனை கண்டித்து, வேத வார்த்தையின்படி நல்ல ஆலோசனைகளை வழங்கினார். "மேய்ப்பரானவர் தன் நிலைமையை எப்படியும்புரித்து,தன்பக்கமாக நின்று, தனக்கு ஆதரவாக இரு ப்பார். தான்கண்ணியமாக செய்து வரும் ஊழியங்களின் நிமித்தம், மேய்பனானவர் இந்த சூழ்நிலையை சமாளித்துக் கொள்வார்" என்று எதிர்பார்த்திருந்த அந்த வாலிபனுக்கு, மனதிலே பெரிய ஏமாற்றமும், தாக்கமும் உண்டாயிருந்தது. மிகவும் மனவேதனை அடைந்தான். துக்கத்தோடே வீட்டிற்கு திரும்பினான். அதை யாரிடமும் கூறாமல், படுக்கையிலே இருந்து கொண்டு, தன் மன வேதனையை தேவனிடம் தெரியப்படுத்தினான். அவன் தேவ வார்த்தைக்கு உண்மையாக கீழ்படிக்கின்ற வாஞ்சையையுடைய வாலிபனாக இருந்ததினால், சில கிழமைக்குள் அவனுடைய துக்கம் மனந்திரும்புத லுக்கு ஏற்றதாக மாறிவிட்டது. "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (*1 பேதுரு 5:6*). என்ற வார்த்தை அவன் மனதிலே கிரியை செய்தது. அந்த வார்த்தைக்கு அவன் தன்னை அர்பணித்தான். பல ஆண்டுகள் கடந்து சென்ற பின்னர், தான் செய்த குற்றத்தின் தார்பரியத்தை உணர்ந்து கொண்டான். எப்படியாக, அந்த மேய்ப்பரானவர், முகதாட்யண்ணமில்லாமல், குறித்து வேளையிலே, வேத வார்த்தையின்படி தன்னை சிட்சித்தார் என்பதை அறிந்து கொண்டான். ஆனால், இன்று அநேகர் சொந்த குடும்பங்களிலே, சபைகளிலே எப்படியான நடந்து கொள்கின்றார்கள்? வாக்குவாதங்களுக்கும், கலகங்களுக்கும், பிரிவினைகளுக்கும், பின்னடைவுகளுக்கும் உடந்தையாகி விடுகின்றார்கள். அதிலிருந்து பின்பு மனந்திரும்புவது நல்லது. ஆனால், அந்த வாலிபனைப் போல மனத்தாழ்மையாடு, கீழ்படிவாக இருந்தால் வாழ்விலே ஏற்படக்கூடிய பல நோவுகளையும், வேண்டப்படாத பின் விளைவுகளையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

**மீகா 6:8**

நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.

**ஜெபம்:** வழிநடத்தும் நல்ல தேவனே, ஒவ்வொரு சந்தர்பப்பங்களிலும் மனத்தாழ்மையோடும், கீழ்படிவோடும் உம்முடைய வார்த்தையை கைகொள்ளும்டிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை கரம்பிடித்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நித்தியமாய் நிலைத்திருப்பவைகள்

> **மாற்கு 13:31**
>
> வானமும் பூமியும் ஒழிந்து போம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை.

இந்த பூமியிலே ஐசுவரியவான்களும், ஏழைகள், பிரபுக்களும், குடிமக்களும் வீடுகளை கட்டுகின்றார்கள். தங்கள் அறிவிக்கும், வசதிக்கும் தக்கதாக அவைகளை அமைத்துக் கொள்கின்றார்கள். அவையொன்றும் பெரும் மழைக்கும், கடும் புயல்களுக்கும் நிலைநிற்பதில்லை. செல்வ செழிப்போடு வாழ்பவர்கள் சிறந்த நவீன தொழில்நுட்பங்களை உபயோகித்து தங்கள் மாளிகை களை கட்டுகின்றார்கள். ஒரு வேளை இந்த பூமியிலே காலநிலைகள் காரணமாக உண்டாகும் புயல்களுக்கு இவைகள் நிலைநிற்கலாம். தேவனுடைய வார்த்தை இன்னதென்பதை உணராமல் தங்கள் வீடுகள் கன்மலையின்மேல் கட்டப்பட்ட வீடுகள் என்று எண்ணிக் கொள்கின்றார்கள். "அவர்கள் நரர் படும் வருத்தத்தில் அகப்படார்கள் மனு'ர் அடையும் உபாதியை அடையாததால், அவர்களை பெருமை சரப்பணியைப் போல் அவர்களைச் சுற்றிக்கொள்ளும் கொடுமை ஆடையைப்போல் அவர்களை மூடிக்கொள்ளும். அவர்கள் கண்கள் கொழுப்பினால் எடுப்பாய்ப் பார்க்கிறது. அவர்கள் இருதயம் விரும்புவதிலும் அதிகமாய் நடந்தேறுகிறது. அவர்கள் சீர்கெட்டுப்போய், அகந்தையாய்க் கொடுமை பேசுகிறார்கள் இறுமாப்பாய்ப் பேசுகிறார்கள். தங்கள் வாய் வானமட்டும் எட்டப்பேசுகிறார்கள் அவர்கள் நாவு பூமியெங்கும் உலாவுகிறது." தங்களுக்கு தங்கள் அறிவும், பிரயாசமும் போதும், ஆனால் வறியவர்களே தேவனை தேட வேண்டும். ஏழைகளுக்கே தேவ பக்தி தேவை என்று கூறிக் கொள்கின்றார்கள். "இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது." (2 பேதுரு 3:7) என்பதை உணராதிருக்கின்றார்கள். பிரியமானவர்களே, ஆண்டவர் இயேசுவ வீடு, கற்களாலும் சீமேந்துதினாலும் கட்டப்படும் வீடுகளைபற்றியதல்ல. மாறாக குடும்பத்தையும், வாழ்க்கையும் பற்றியதாகும். ஒருவன் ஆண்டவர் இயேசுவின் வார்த்தையின்படி தன் குடும்ப வாழ்வை அமைத்துக் கொள்ளும்போது, அவன் போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவின் மேல் தன் வாழ்வை அமைத்துக் கொள்கின்றான். வானமும் பூமியும் ஒழிந்துபோம், ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை. ஆதலால், அந்த வார்த்தையில் நிலைத்திருக்கின்றவர்களும் அசைக்கப்படுவதில்லை.

**ஜெபம்**: நித்தியமான தேவனாகிய கர்த்தாவே, நீர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா என்னும் உண்மையை நான் அறிந்து உணர்ந்து தேவ பயத்தோடு, உம் வழிகளில் நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கணக்குப் பார்க்க நல்ல நேரம்!

இந்த ஆண்டின் கடைசி நாட்களில் வந்திருக்கின்றோம். நம் வாழ்விலே இன்னுமொரு ஆண்டு சீக்கிரமாக சரித்திரமாக மாறிவிடும். "நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன். நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை. நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய் அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது" என்ற வாக்குத்தத்தின்படி, தனிப்பட்ட விதமாக நாம் ஒவ்வொருவரும், தண்ணீர்களையும், ஆறுகளையும்கடக்குமாற் போன்ற அனுபவங்களைளும், அக்கினியில் நடந்து போவது போன்ற அனுபவங்களையும் கடந்து வந்திருப்போம். இந்த ஆண்டை சற்று திரும்பிப் பாருங்கள். வாக்குரைத்த தேவன் உண்மையுள்ளவராகவே இருக்கின்றார். கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். (சங்கீதம் 103:8). நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. (புலம்பல் 3:22). கடந்து வந்த பாதையை திரும்பி பாருங்கள். எத்தனை சவால்களுக்கு நீங்கள் முகம் கொடுக்க வேண்டியதாக இருந்தது? எத்தனை போராட்டங்கள்? நாம் தேடிக் கொண்ட பிரச்சனைகள், நம்மை தேடி வந்த பிரச்சனைகள், நன்மைக்கு பதிலாக தீமை செய்த இடங்கள், தீமை பெற்றும் நன்மை செய்த இடங்கள், இப்படியாக பற்பல சந்தர்பங்களை கடந்து வந்திருக்கின்றோம். கர்த்தர் உண்மையுள்ளவராகவே இருக்கின்றார் என்பதில் வேற்றுமையான எந்த கருத்தும் இல்லை. அவ்வண்ணமாக விசுவாசிகளும், தாங்கள் பிதாவாகிய தேவனுடைய பிள்ளைகள் ஆதலால், தாங்களும் உண்மையுள்ளவர்களாக இருக்கின்றோம் என்று எண்ணிக் கொள்கின்றார்கள். ஆனால், உண்மை அதுவல்ல. தேவ வார்த்தையின் வெளிச்சத்திலே நம் வாழ்வை ஆராய்ந்து பாரக்கும் போது, நம்மை நாமே நிதானித்து அறிய முடியும். இந்த நாட்கள் கணக்குப் பார்பதற்கு நல்ல நாட்கள். தவறிப்போன இடங்களை நினைத்துப் பாருங்கள். அவைகளில் இன்னும் மனந்திரு ப்பாத குற்றங்களை தேவ வார்த்தையின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பாருங்கள். மன்னிப்பை கொடுக்க தவறி இடங்கள் எவை? இன்னும் மன்னிப்பை பெற்றுக் கொள்ள மனதில்லாத இடங்கள் எத்தனை? வாழ்விலே இன்னும் வேதனை உண்டாக்கும் வழிகள் உண்டோ என்பதை தேவனிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள். வாழ்க்கையை கர்த்தருக்குள் புதுபித்துக் கொள்ளுங்கள்.

**சங்கீதம் 103:13**

தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.

**ஜெபம்**: வாக்குமாறாத உண்மையுள்ள தேவனே, வேதனை உண்டாக்கும் வழிகளை நான் விட்டு, உம்மிடம் திரும்பத்தக்கதாக உணர்வுள்ள இருதயத்தை எனக்கு தந்து என்னை உம் வழியிலே நடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனப்பூர்வமாக நன்றி!

கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார் அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவி டுவதுமில்லை. நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்று தீர்க்க தரியாகிய மோசே, தேவ ஜனங்களுக்கு கூறியது போல, நேற்றும் இன் றும் என்றும் மாறாத தேவன் இன்றும், இனியும் இருக்கின்றவராய் இருக்கின்றார். உங்கள் வாழ்விலே பெருமழை போன்ற அனுபவங்க ளும் புயல் காற்று மோதுவதைப் போன்ற போராட்டங்ளும் ஏற்பட்டும், இன்னும் நீங்கள் விசுவாசத்திலே நிலைத்திருக்கின்றீர்கள் என்றால் அது எத்தனை மேன்மையானது. அது கர்த்தருடைய செயல். கன்ம லையாகிய கர்த்தர் நம்மோடு இரு க்கின்றார். எனவே, இந்த நாளிலே இன்னும் அதிகமாக நன்றி சொல்லுங்கள். மனதார நன்றி சொல்லுங்கள். என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி என் முழு உள்ளமே, அவ ருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார் கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது. ஒடுக்கப்படுகிற யாவருக்கும், கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார். அவர் தமது வழிகளை மோசேக்கும், தமது கிரியைகளை இஸ்ரவேல் புத்திரருக்கும் தெரியப்ப ண்ணினார். கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார் என்றை க்கும் கோபங்கொண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக் கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக் கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ் வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்மு டைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைக ளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். *(சங்கீதம் 103:1-13).*

**சகரியா 4:6**

**பலத்தினாலும் அல்ல, பரா க்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே யே ஆகும் என்று சேனை களின் கர்த்தர் சொல்லுகி றார்.**

**ஜெபம்:** என்னுடைய சுய ஞானத்தினால்ல தேவனே, என்னுடைய பலத்தினாலும் அல்ல ஆண்டவரே, உம்முடைய சத்திய ஆவியினாலே நான் இன்னுமொரு ஆண்டை முடிக்க தந்த கிருபைக்காக நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.